**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.660/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கிருஷ்ணவேனி** | **Caste** | : | |
| **Father's Name** | : | சுப்பிரமணி | **Calling** | : | **சார்பு ஆய்வாளர் - தாலுகா காவல் நிலையம்** |
| **Village** | : | **திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **33** |
| | | | **Dated** | : | **24.11.2025.** |

**24.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 திருமதி.**கிருஷ்ணவேனி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 ம் தேதி காலை

6.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது திண்டுக்கல் வேடசந்தூர் தாலுகா பூத்தாம்பட்டி அஞ்சல் , தேவநாயக்கன்பட்டி, V அம்மாப்பட்டியை சேர்ந்த நாகராஜ் மனைவி அழகம்மாள் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 81/2025 U/s.281, 106(1) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையும் , புகாரையும் கனம் JM.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார். **முதல் தகவல்அறிக்கை அதசா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சம்வம் நடந்த நாளுக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கும் வழக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு நாள் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் புகாரில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு 28.02.2025ம் நாள் 15 நாள்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.24 12:57:21 +0530

Judicial Magistrate No.I

Dindigul.